சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.109/2018</u>

11.11.2025

வா.சா.3 திரு. ஆறுமுகம், த/பெ. பெரியசாமி

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கை யார் யார் மீது போட்டுள்ளார்கள் என்றால் மணிவண்ணன், சாந்தமூர்த்தி, ஆனந்த் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி இருவர் பெயரில் மட்டும் வழக்கு போட்டுள்ளாரா என்றால் ஆமாம். மணிவண்ணன் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்தை காலி செய்யவேண்டும் என வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்து திருவாரூர் பஸ்ஸ்டாண்டுக்கு எதிர்புறம் உள்ளது. தாவா சொத்தின் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளை நான்தான் சொன்னேன். இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள இரண்டு தெட்சிணாமூர்த்திகளின் தகப்பனார் பெயர்கள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எந்த ஆண்டு யார் பெயரில் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. தெட்சிணாமூர்த்திக்கும், வீராசாமிக்கும் என்ன உறவு என்று எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் தெட்சிணாமூர்த்திக்கு எத்தனை குழந்தைகள் என்று சரியாக எனக்கு தெரியாது. 6, 7 குழந்தைகள் இருக்கும். சாந்தமூர்த்தியின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தியின் இன்சியல் எ ஆகும். மணிவண்ணன் தகப்பனார் வர்த்தக சங்கத்தில் தலைவராக இருந்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் கமலாம்பிகா பிரஸ் நடந்துவருகிறதா என்றால் ஆமாம். அந்த விவரம் எனக்கு தெரியும். தெட்சிணாமூர்த்தி நாகப்பட்டிணம் சுப்பையா மெடிக்கலில் வேலை பார்த்துவந்தார். சுப்பையா மெடிக்கலின் ஓனர் யார் என்று தெரியாது. சென்னையில் எங்கு குடியிருந்தார் என்றால் சென்னைக்கு போவதாக சொன்னார், எங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. எப்போது திரும்பி

வந்தார் என்றால் 5, 6 வருடம் கழித்து வந்தார். பி.வா.சா.ஆ.2 போட்டோவில் உள்ள இடத்தில்தான் கமலாம்பிகா பிரஸ் நடக்கிறதா என்றால் ஆமாம். டி. தெட்சிணாமூர்த்தி எ தெட்சிணாமூர்த்திக்கு இடம் விற்பனை செய்தார் எந்த வருடம் விற்பனை செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நடேசசெட்டியார் குமாரர் ஞானசேகரன் மற்றும் சேட்டுக்கு யாரால் எந்த ஆண்டு எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடேசன் யார் என்றால் சுப்புராமன் மகன் வெங்கடேசன் ஆவார். சொத்துக்கள் ரூ.3,00,000/-க்கு விற்பனை செய்வதாகவும் பின்னிட்டு ரூ.6,00,000/- பேசப்பட்டதாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் ஏற்பட்டதா என்றால் வாய்மொழியாக தான் காரைக்காலில் சென்று பேசினோம். பேச்சுவார்த்தையின் போது டி.தெட்சிணாமூர்த்தி, ஆர்.ராமதாஸ், நான் ஆகியோர்கள் இருந்தோம். அப்போது சேகரோ சேகரின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தியோ அங்கு இல்லை என்றால் சரிதான். வர்த்தக சங்கத்தில் போட்டியிடுவதற்கு கடை உரிமையாளராக இருக்கவேண்டும் என்றாலும் கடையில் வேலை பார்த்தால் போட்டியிட இயலாது என்றாலும் சரிதான். நான் சொல்வது போல் காரைக்காலில் சென்று பேசவில்லை என்றாலும் சேகரோ அவரின் தகப்பனாரோ இல்லாமல் நாங்கள் பேசவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் 20 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட தீ விபத்திலிருந்து கமலாம்பிகா பிரஸ் நடைபெறவில்லை என்றால் சரியல்ல, நடைப்பெற்று வருகிறது. தாவா சொத்துக்கள் மணிவண்ணன், கமலக்கண்ணனுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. டி.தெட்சிணாமூர்த்திக்கு சொந்தமானதாகும். தாவா சொத்து டி. தெட்சிணாமூர்த்திக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகளுக்கு திருவாரூர் பேருந்து நிலையம்அருகே 10, 15 கடைகள் இருக்குமா என்றால் இருக்கும். அந்த பகுதிகளில் அனைத்தும் கடைகள் தான் உள்ளது என்றால் சரிதான். வாதி சேகரின் தகப்பனார் தாவா சொத்திற்கு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாடகை ரசீதுகள் செலுத்தியுள்ளார் என்றால் செலுத்தியிருக்கலாம் எனக்கு தெரியாது. எனக்கு ஆனந்த் நெருக்கமானவர் என்றால் நானும் அவரும் வர்த்தக சங்கத்தில் பொறுப்பிலிருந்த காலக்கட்டத்தில் அவரும் இருந்தார். என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க ஆனந்த் அழைத்து வந்தார் என்றால் ஆமாம். கட்டிடம் ஒப்பந்தகாரர் பெருமாளால் கட்டப்பட்டதாக வழக்கிற்காக

பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த காலத்திலும் பேச்சுவார்த்தை நடக்கவில்லை என்றாலும் ஆனந்த் எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.